மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.3/19

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | ஜாதி | |
| த/பெ. | அண்ணாமலை | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 37 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 18.12.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்தில் என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டு இருக்கிறேன் என்றால் எனது தகப்பனாரும் நாங்களும் சேர்ந்து வாங்கிய சொத்து என்று வழக்குப்போட்டு இருக்கிறேன். 2 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்குப்போட்டு இருக்கிறேன். நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து சொத்து வாங்கியதாக சொன்னது எந்த தேதியில் என்றால் எனக்கு தேதி ஞாகம் இல்லை சொத்து வாங்கி காலக்கட்டத்தில் எனக்கு 15,16 வயது இருக்கும். 1ம் வாதிக்கு என்னை விட இரண்டு வயது கூடுதலாக இருக்கும். மேற்படி சொத்து வாங்கும்போது எனக்கு 5 வயது 1ம் வாதிக்கு 8 வயது என்றால் சரிதான். அண்ணாமலை கொத்தனார் வேலை பார்கிறார். தாவா சொத்துக்களை தவிர பூர்வீக சொத்து எதுவும் இல்லை. எனது தகப்பனாருக்கு கொத்தனார் வேலையை தவிர்த்து வேறு வருமானம் கிடையாது என்றால் சரிதான். எனது தகப்பனார் 2 வது திருமணம் செய்து எத்தனை வருடம் தனியாக இருந்தார் என்றால் எல்லாரும் குடும்பமாகத்தான் இருந்தோம். தற்போது தனித்தனியாகத்தான் இருக்கிறோம் திருமணம் ஆனதிலிருந்து தனியாகத்தான் இருக்கிறோம்.

2. எனது அண்ணன் ராஜாங்கம் அறந்தாங்கியில் தான் குடியிருக்கிறார். எனது அண்ணனுக்கு திருமணம் ஆகி 13 வருடம் ஆகிறது. எனக்கு திருமணம் ஆகி 12 வருடம் ஆகிறது. தாவா சொத்துக்கு கிரையம் முன் பாத்தியஸ்தர் பெயரில் தான் பட்டா உள்ள விபரம் தெரியும் என்றால் சரிதான். சாட்சி தன்னிசையாக தனது தகப்பனார் இரண்டாம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து இருந்ததை தானும் 1ம் வாதியும் தான் மீட்டதாக கூறுகிறார்) நான் சொல்வது தவறு என்றாலும் மேற்கண்ட கட்சியை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கான பட்டா பற்றி எப்போது தெரியும் என்றால் தாவா சொத்துக்கான பட்டா என் தகப்பனார் பெயரில் இருப்பது நீண்ட காலத்திற்கு முன்பே தெரியும் தற்போது தாவா சொத்துக்கான பட்டா 2 ம் பிரதிவாதி பெயரில் இருக்கிறது.

எனது தயார் பெயர் அஞ்சம்மாள் என்றால் சரிதான். எனது தாயாருக்கு புற்றுநோய் ஏற்பட்டு அதற்கான சிகிச்சை செலவை 1ம் பிரதிவாதி தான் பார்த்தார் என்றால் சரியல்ல. நான் 1 லட்சம் கொடுத்தேன் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பார்திய சொத்து என்றாலும் தன் மனைவியின் புற்றுநோய் சிகிச்சைக்காகத்தான் தாவா சொத்தை விற்க 1ம் பிரதிவாதி முயற்சித்தார் என்றாலும் அதை தடுப்பதற்காக நாங்கள் வழக்கு போட்டு இருக்கிறோம் என்றால் சரியல்ல.

3. நாங்கள் வீடு கட்டியுள்ள புலஎண் 9/1 ஆகும். மேற்படி இடம் நத்தம் வகைப்பாடு இடம் ஆகும். மேற்படி புலஎண்ணில் தான் வீடு கட்டியிருக்கிறேன் என்பதற்கான வருவாய் ஆவணங்கள் நான் தாக்கல் செய்து இ ருக்கிறேனா என்றால் செய்து இருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள EP கட்டண ரசீது என் தகப்பனார் பெயரில் உள்ளது. எங்கள் பெயரில் வீட்டுவரி ரசீது கிடையாது என்றாலும் வழக்கிற்காக வீட்டுவரி ரசீது தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்தவிதமான உரிமை இல்லை என்றாலும் வேறு நபருக்கு கிரையம் செய்யக்கூடாது என்பதற்காக பொய்யாக வழக்குப்போட்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிறந்த தேதி 10.04.1986 ஆகும். 1990 ம் வருடம் எனக்கு 4 வயது என்றால் சரிதான் அந்த 4 வயதில் எனக்கு வேலை செய்வதற்கான உடல் திறன் இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். எனக்கும் எனது அணண்ணுக்கும் இரண்டு வயது வித்தியாசம் வழக்கு சொத்தை எனது தகப்பனார் கிரையம் பெற வேறு பூர்வீகச் சொத்துக்களை கிரையம் விற்றரா என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் 04.04.1990 ம் தேதி பெரியசாமி மகன் அண்ணாமலை ஆகிய 1ம் பிரதிவாதி காளி மகன் நடேசன் இடம் இருந்து கிரையம் வாங்கியதாக என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவண அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயரில் நாளது தேதி வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். வழக்கு 2ம் அயிட்ட சொத்துக்கு வா.சா.ஆ.2 படி 2ம் பிரதிவாதியான மாரிமுத்துக்கோனார் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 மின்இணைப்பு என் தகப்பனார் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு 1வது அயிட்ட சொத்தை பொறுத்து நானும் 1ம் வாதியும் உடல்உழைப்பை கொடுத்தற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான் ஆனால் கொடுத்து இருக்கிறேன். கிரையம் வாங்கிய காலத்தில் எதுவும் கொடுக்கவில்லை தாத்தாவின் பூர்வீக சொத்தை விற்றுத்தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினார்.

2. மேற்படி விபரம் எனக்கு 7,8 வயதில் தெரியவந்தது. தற்போது எனக்கு 37 வயது ஆகிறது. எனது பூர்வீகச் சொத்தை விற்று எனது தகப்பனார் தாவா சொத்தை கிரையம் வாங்கி விபரம் 18 வயதில் தெரியவந்தும் நாளது தேதிவரை அதுசம்பந்தமான நான் நடவடிக்கை

எடுக்கவில்லை என்றால் சரிதான். பூர்வீகச் சொத்தை விற்று தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கு எவ்வித ஆவணமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி சார்பதிவாளருக்கு கேவியட் மனு தாவா சொத்தை பொறுத்து தாக்கல் செய்ததால் தாவா சொத்துச்சம்பந்தமான ஆவணங்களை பதிவு செய்யக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 1ம் வாதி சார்பதிவாளாரிடம் ஆட்சேபணை அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 அறிவிப்பில் 1ம் வாதிக்காகவும் சேர்த்துக்கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அரசு அலுவலரான முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படும்போது அதை பதிவு செய்யவேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது என்றால் சரிதான்.

3. தாவா வழக்கில் சார்பதிவாளர் பத்திரம் பதிவு செய்யக்கூடாது என்று இடைக்காலத்தடை உத்தரவு பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பூர்வீகச் சொத்து இல்லை என்றால் சரியல்ல. பூர்வீகச் சொத்துதான் தாவா 2 வது அயிட்ட சொத்து சொத்துக்கான பட்டா 2 ம் பிரதிவாதி பெயரில் இருக்கிறது என்றால் தவறுதலாக மாறிவிட்டது. வா.சா.ஆ.4 அறிவிப்பில் இரண்டாம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா குறித்த விளக்கத்தை சொல்லவில்லை என்றாலும் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். சொத்தின் உண்மையான உரிமையாளர் பத்திரம் தாக்கல் செய்யும் போது அதை பதிவு செய்ய சார்பதிவாளர் கடமை பட்டவர் என்றாலும் சார்பதிவாளரை தேவையில்லாமல் தரப்பினராக சேர்த்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.